# பரங்கிமலையில் கூடுதல், 'பார்க்கிங்'

சென்னை, அக். 13–

பரங்கிமலை ரயில் நிலையத்தை ஒட்டி, மெட்ரோ ரயில் நிலையம் உள்ளது.

இதற்காக கட்டப்பட்ட கட்டடத்தில், தரை தளம், முதல் தளம் ஆகிய பகுதிகளில், வாகன நிறுத்துமிட வசதி ஏற்கனவே அமைந்துள்ளது.

இதில், கூடுதலாக, ரயில் நிலைய சுரங்கப்பாதை முகப்பு அருகில், இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களை நிறுத்துவதற்கான, கூடுதல் இடவசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மெட்ரோ ரயில் மற்றும் புறநகர் மின்சார ரயிலுக்கு செல்வோர், இந்த வசதியை பயன்படுத்திக் கொள்ளலாம். இந்த வசதி, 24 மணி நேரமும் செயல்படும் என, மெட்ரோ ரயில் நிறுவனம் அறிவித்துள்ளது.